

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



**THE WORD OF CHRIST**

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 3 அக்டோபர் 2003 கனி 11

ஆசிரியர்

B. அர்ஜுனன்

## கிறிஸ்துவின் வசன மாத இதழின் பன்னிரண்டாவது மாவட்ட வாசகர் கருத்தரங்கு

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கிற்கு விழுப்புரம் மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம்.

**நோக்கம்** :
- 1992 முதல் 2002 வரை வெளி வந்த இதழைக் குறித்து ஓர் ஆய்வு
- இந்த பன்னிரண்டாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை
- எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு

**நாள் : அக்டோபர் 25-ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி**

**இடம் : கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்,**
113, பாரதி தெரு, பெரிய அக்ரஹாரம்,
ராஜாதேசிங்கு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பின்புறம்,
செஞ்சி - 604 202. விழுப்புரம் மாவட்டம்.

மேலும் விபரமறிய
**The Word of Christ,**
✆ (04543) 263278

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*
**சகோ. காளப்பன்**
✆ 04145 - 223906

*வாருங்கள்! பங்கு பெறுங்கள்!! அறிந்து கொள்ளுங்கள்!!!*

# தெரிந்து கொள்ளுங்கள்

## ஏதோம்

-K.R.K ரவி ஆசீர்

ஏதோம் என்னும் பகுதி சில சமயங்களில் சேயீர் மலைகள் என்று அழைக்கப்படுகிறது. (ஆதி.14 : 16 ; உபா.1 : 2; 2 : 5). சேயீரிலே குடியிருக்கிற ஏசாவின் புத்திரர் என்று (உபா.2 : 4) கூறுகிறது. இந்த ஏதோம் பகுதியில் கடல் மட்டத்திலிருந்து 4000 அடி உயரத்துக்கு மேலே மலைகள் அமைந்துள்ளன. மிக உயரமான சிகரங்கள் கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 5,700 அடி உயரத்துக்கும் மேலே அமைந்துள்ளன. யோபுடைய சிநேகிதரில் ஒருவனாகிய எலிப்பாஸ், ஏதோம் தேசத்தைச் சேர்ந்த தேமான் என்னும் மாவட்டத்தைச் சேர்ந்தவன்.

ஏதோமிலுள்ள அரணான பட்டணம் ஒன்றிற்கு "சேலா" என்று பெயர் இஸ்ரவேல் இராஜாவாகிய அமத்சியா இதற்கு "யொக்தியேல்" என்ற பெயரைச் சூட்டினான் (2 இரா.14 : 7). அமத்சியாவும், போஸ்றாவும் சேர்ந்து சேலாவைக் கைப்பற்றி இருந்தார்கள் (ஆமோ. 1 : 12). ஏதோம் தேசத்தின் எல்லையிலுள்ள ஓர் என்னும் மலையிலே சீன வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு இஸ்ரவேலர் பாளையமிறங்கியிருந்தார்கள் (எண்.33 : 37). மோசே ஏதோம் ராஜாவைக் கேட்டுக் கொண்ட போதிலும் அவன் இஸ்ரவேல் புத்திரரை ஏதோம் தேசத்தின் வழியாக கடந்து போக அனுமதிக்கவில்லை (எண்.20 : 14-21).



FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 3 அக்டோபர் 2003 கனி 11

ஆசிரியருரை

# நேரமில்லை
# No Time




மனிதனுடைய சிந்தனைகளும், செயல்பாடுகளும் அதிவேகமாக முன்னேறி வருகிறது. ஆகையால் அவர்களுடைய பதில் I am very busy என்பதே. தேவனாகிய கர்த்தர் நாம் காண்கின்ற அனைத்தையும் ஆறு நாட்களில் சிருஷ்டித்தார் என திருமறை (விவிலியம்) கூறு கிறது. ஆறாம் நாளில் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். அன்று உண்டாக்கப்பட்ட மனிதன் இன்று வரை தன் வாழ்நாட்களிலே தேவனை தேடவும், அவர் கொடுத்த பரிசுத்த வேதாகமத்தை படிக்கவும், அதற்கு கீழ்ப்படியவும், அவரால் அனுப்பப்பட்ட உலக இரட்சகர் இயேசுவை விசுவாசிக்கவும், அவரை ஆராதிக்கவும் நேரம் ஒதுக்காமல் உள்ள வேலையை பார்க்கவே போதும் போதும் என்றாகி விடுகிறது. இதிலே எங்கே தேவனை தேடுவது, அவர் அருளிச் செய்த புத்தகத்தை படிப்பது, அவரை ஆராதிப்பது என்று சலிப்போடு சொல்லிக் கொள்கிறான்.

**பூமியிலே மனுஷனுடைய நாட்கள் எண்ணப்படுகிறது.** அவன் வாழ்நாள் குறுகினவனாயிருக்கிறான். இந்நாட்களிலே அவன் தன்னை உண்டாக்கின தேவனை தேட வேண்டும். "அவன் இரண்டாயிரம் வருஷம் பிழைத்திருந்தாலும் ஒரு நன்மையும் காண்பதில்லை" (பிர. 6 : 6). ஆகையால் நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை என்று பிரசங்கி கூறுகிறான். கர்த்தரை கண்டடையத்தக்க சமயத்திலே தேட வேண்டும். வயதாகி ஊன்றுகோல் பிடித்து, நடக்க முடியாமல் தள்ளாடும் சமயத்தில் தேவனை தேட நினைத்தாலும் அது முடியாது போகும். ஆகவே வாலிப பிராயத்திலே சிருஷ்டிகரை தேடு. ஆண்டவர் பார்வைக்கு ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவுமிருக்கிறது. மோசே ஜெபிக்கும் போது "எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும், சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது. நாங்களும் பறந்து போகிறோம்" (சங்.90 : 10) என்கிறான். இப்படி கடந்து போகும் மாயையான வாழ்க்கையிலே எனக்குத் தேவனை தேட நேரமில்லை என்று சொல்லலாகாது. "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்" (மத். 6 : 33).

**உலகத்திலே அதிகமாக விற்பனையாகும் புத்தகம் பரிசுத்த வேதாகமமே.** இந்த வேதாகமம் கிடைக்காத இடமே இல்லை என்றே சொல்லலாம். இன்று வானொலி, டெலிவிஷன், கைபிரதிகள், மற்றும் மாத இதழ் போன்றவைகளின் மூலமாக அவரவருடைய பாஷையில் வேத வசனங்கள் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இதை கேட்கவும், பார்க்கவும், படிக்கவும், நேரமில்லை என்று சொல்லும் மக்களுக்குப் பஞ்சமில்லை. தேவன் மனிதனுக்கு தேவையான அனைத்தையும் இப்பூமியிலே உண்டாக்கி உள்ளார். மேலும் அவனுக்கு பிரயோஜனமாக பகல் 12 மணி நேரமும், இரவு 12 மணி நேரமுமாக கொடுத்துள்ளார். இதிலே தன் சொந்த வேலைகளுக்கு முதலிடம் கொடுத்து அதற்காகவே வாழ்கிறான். இதையெல்லாம் கொடுத்த தேவனுக்கு முதலிடம் கொடுக்காமல், முடியவில்லை, நேரமில்லை, tired ஆக இருக்கிறது என்று சாக்குபோக்கு சொல்லிக் கொண்டு வேதாகமத்தை படிக்கவும், அதைக் குறித்து ஆராய்ந்து பார்க்கவும், சொர்ப்ப நேரத்தைக் கூட ஒதுக்க அவன் முன்வருகிறதில்லை. அதே வேளையில் ஆறாயிரம் சம்பளம் கொடுக்கும் ஒரு எஜமானுக்கு ஆறுமணிநேரம் ஏற்ற ஊழியக்காரனாக உழைக்கிறான். இங்கே சற்று சிந்திக்க வேண்டுகிறேன். எந்தவித விடுமுறையும் இல்லாமல் ஒரு வருடத்திற்கு 40 மில்லியன்முறை துடிக்கும் இருதயத்தை நமக்கு தந்த தேவனுக்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்! அத்தோடு பூமியிலே சகலத்தையும் ஆண்டு அனுபவித்துக் கொள்ளுங்கள் என்ற அந்த பரமதேவனுக்கு நாம் என்னதான் செய்திருக்கிறோம்? வேலை பார்க்கும் இடத்தில் ஒரு மணிநேரம் ஓ.பி அடித்தால் வேலையை விட்டு தூக்கி விடுவார்கள் என்ற பயம். ஆனால் தேவ சமூகத்தில் கொஞ்சமும் பயமில்லை ஏனென்றால் அவர் மன்னிப்பதற்கு கிருபை பொருந்திய தேவன். இன்று வேதம் வாசிக்காவிட்டாலும் நாளை வாசிப்போம் என்று இப்படியே தள்ளிப் போட்டு தன் ஜீவிய நாட்களில் வேதம் வாசிக்காமலும் தேவனுடைய உன்னதமான வழியை அறியாமலும் முட்டையிட்டு அவயங்காத்து குஞ்சு பொரிக்காமல் கடந்து செல்கிற கவுதாரியைப் போல போய் விடுகிறான். தாவீதோ அப்படியல்ல "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்" (சங்.119 ; 97) என்றான்.

**தேவன் மனிதனிடத்தில் கீழ்படிதலை எதிர்பார்க்கிறார்.** பூமியில் விளையக் கூடிய பொருள்களை நீங்கள் அள்ளி, அள்ளி கொடுத்தாலும், முதல் தரமான ஆடு, மாடுகளை பலியிட்டாலும் அவைகளில் கர்த்தர் பிரியமாயிரார். "கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும், கீழ்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நினத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்." (1 சாமு.15:22) என சாமுவேல் தீர்க்கன் குறிப்பிடுகிறார். செவி கொடுப்பதும், கீழ்படிதலும் அநேகருக்கு கசப்பான கீரையைப் போல் இருக்கும். அதே வேளையில் குடும்பத்தையே ஆட்டிப் படைக்கும் சிலர் திருமணத்திற்கு பின்பு மனைவிக்கு அப்படியே கீழ்படிவார்கள். அதே போல் மனைவி யானவளும் கணவனுக்கு அப்படியே கீழ்ப்படிவாள். இந்த கீழ்ப்படிதல் எப்படி வந்தது? யாராவது ஒரு வார்த்தை பேசி விட்டால் போதும் தன் மனைவியைப் பற்றியோ, அல்லது கணவனைப் பற்றியோ கடல் அலையைப் போல கோபம் பொங்கி வரும். இருக்க வேண்டியது தான். இப்படிப்பட்ட கீழ்ப்படிதலை ஏன் பரமதேவனிடம் காட்டக் கூடாது. இந்த விஷயத்தில் ஆதியும் அந்தமுமானவரை ஏன் புறம்பே தள்ள வேண்டும்? இப்படி இஸ்ரவேலர் தேவனை புறம்பே தள்ளியதால் "இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் வைக்கிறேன். இன்று நான் உங்களுக்கு கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதமும் எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல், இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வழியை விட்டு வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால்

சாபமும் வரும்" (உபா. 11 : 26-28) என்று எச்சரித்தார். ஆபிரகாம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்ததால் ஆசீர்வதிக்கப்பட்டான். நீங்களும் இப்பூமியில் ஆசீர்வதிக்கப்படவும் ஆசீர்வாதத்தை சுதந்தரிக்கவும் கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படியுங்கள்.

**"விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்;** ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி.11 : 6). இந்த விசுவாசத்தை தேவன் மீதும் அவர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவின் மீதும் வைக்க வேண்டும், அவராலேயன்றி வேறொருவராலும் நமக்கு இரட்சிப்பு இல்லை."நானே அவர் என்று நீங்கள் விசுவாசியா விட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" (யோவா.8 : 24) என்றார். இன்று மனிதன் தன் பாவத்தைப் போக்க பால் அபிஷேகம் செய்கிறான். பால் நம்முடைய பாவத்தை கழுவாது. பாவமில்லாத இயேசுவின் பரிசுத்த இரத்தமே பாவமுள்ள நம்முடைய ரத்தத்தை சுத்திகரிக்கும். இதை நாம் விசுவாசத்தினால் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். நமது ஆண்டவரும் இதைக் குறித்து சொல்லும் போது "இது பாவமன்னிப்புண்டாக்கும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக் குரிய என்னுடைய இரத்தமாயிருக் கிறது" (மத்.26 : 28) என்றார். "பேலிக்ஸ் யூதஸ்திரீ யாகிய தன் மனைவி துருசில்லாளுடனே கூட வந்து பவுலை அழைப்பித்து கிறிஸ்துவைப் பற்றும், விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக் கேட்டான்" (அப்.24 : 25). பவுல் சற்று ஆழமாக போதிக்கும் போது அதாவது நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத் தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து இப்போது நீ போகலாம் எனக்குச் சமயமான போது உன்னை அழைப்பிப்பேன் என்றான். இப்படித்தான் கேட்கிறவர்களுக்கு பிடித்தாற் போல் பிரசங்கியார்கள் பேசாவிட்டால் ஒன்று எழுந்து போய் விடுவார்கள் அல்லது போதும் நாளை பார்க்கலாம் என்று சொல்லி அத்தோடு பேச்சை நிறுத்தி விடுவார்கள். பிரியமானவர்களே! நாளை என்பது நம்முடைய கைகளில் இல்லை. "நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலம் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறது"(யாக்.4 : 14). நாளைய தினத்தைக் குறித்து அறியாத நாம் இன்றே ஆயத்தப்படுவோம். இயேசுவில் விசுவாசம் வைப்போம்.

**ஆராதனை என்பது நாம் தேவனுக்கு செலுத்த வேண்டிய ஒன்று.** ஏதோ வாழ்ந்தோம் போனோம் என்று இல்லாதபடி நம்மை உண்டாக்கின தேவனை நாம் ஆராதிக்க வேண்டும். பூமியில் உண்டாக்கப்பட்ட சகலமும் உண்மையான தேவனை ஆராதிக்கும் போது நாம் உண்டாக்கப்பட்டவைகளை ஆராதிக்கலாமா? ஆராதனை நம்முடையை விருப்பமாயிருக்கக் கூடாது மாறாக தேவனுடைய விருப்பத்தின்படியே ஆராதிக்க வேண்டும். "தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களா யிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" (யோவா 4 : 23, 24). இவ்விதமான தொழுகையை இப்புவியில் சில இடங்களிலே தான் நாம் காண முடிகிறது. வேதாகமத்தை எடுத்து பிரசங்கிக்கிற அநேக திருச்சபைகள் கூட இந்த விதமாக தேவனை ஆராதிப்பதில்லை. அவர்களுக்கு இவ்வசனத்தின் கருத்து தெரியாமலில்லை. அவர்கள் தங்களுடைய தலைமை ஸ்தாபனங்களுக்கு கட்டுப்பட்டு இருப்பதால், ஸ்தாபனத்தின் விருப்பத்தையே அங்கு நிறைவேற்ற முயலுகின்றனர், பிதாவின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இதை அறியாத அப்பாவி மக்கள் தண்ணீரில் நீந்தும் வாத்துக் கூட்டங்களைப் போல தண்ணீர் ஒட்டாமல் வெளி வருகின்றனர்.

ஆராதனைக்கு செல்கிறார்களே ஒழிய முழுதும் கழுவப்படவில்லை. இவர்கள் எப்படி பிதாவின் திரு சித்தத்தை நிறைவேற்ற முடியும். இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களைப் பார்த்து உலகமெங்கும் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்றவுடன் உடனே கீழ்ப்படிந்து சிதறிப் போனவர்கள் எங்குந் திரிந்து சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தார்கள். அவர்கள் எந்தவிதமான சாக்கு போக்கும் சொல்லாமல் ஆங்காங்கு சபைகளை எழுப்பினார்கள். இன்று அநேக சபைகள் சுவிசேஷம் அறிவிக்காமல் முடங்கிக் கிடக்கிறது. வருடம் ஒரு முறை சபை கூடி கூத்தாடி எங்கு படுத்திருப்பார்களோ தெரியாது. அந்த அளவுக்கு மதி மயங்கிப் போய் இருப்பார்கள், சில சபையார் எங்கள் சபையில் அனைவரும் அரசு ஊழியர்கள் எங்களுக்கு அலுவலகம் போய் வரவே நேரம் போதவில்லை இந்தாருங்கள் 10 ரூபாய் காணிக்கை, யாரோ போய் சொல்லுங்கள் என்று திருப்தியடைந்து விடுகிறார்கள்." இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்ற காலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகாய் 1 : 2). திருச்சபை பிதாக்களே சற்று சிந்தியுங்கள். "இந்த வீடு பாழாய்க் கிடக்கும் போது, நீங்கள் மச்சுப் பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும் படியான காலம் இதுவோ!... நீங்கள் திரளாய் விதைத்தாலும் கொஞ்சமாய் அறுத்துக் கொண்டு வருகிறீர்கள்; நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை; குடித்தும் பரிபூரணமடையவில்லை; நீங்கள் வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர் விடவில்லை. கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான். உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (ஆகாய் 1 : 4-7).

**சுவிசேஷகனுக்கு பவுல் கொடுத்த ஆலோசனை** "சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு"(2 தீமோ.42).இன்றைய சுவிசேஷகர்களில் பலர் சமயம் வாய்க்குதோ, வாய்க்கவில்லையோ, வாங்குவதிலே குறியாயிருக்கின்றனர். எலிசாவுக்கு ஒரு வேலைக்காரன் இவர்களைப் போல இருந்தான் அவனை பார்த்து "பணத்தை வாங்குவதற்கும், வஸ்திரங்களையும், ஒலிவத் தோப்புகளையும், திராட்சைத் தோட்டங்களையும் ஆடு, மாடுகளையும், வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?" (2 இரா.5 : 26) என்று கேட்டான். இன்றைய ஊழியர்களின் அவல நிலையும் இப்படித்தானிருக்கிறது. வீடுகளைக் கட்டவும், நிலங்களை வாங்கவும், அதிகமாக வேலைக்காரர்களைக் கொண்டும் சிட்டியிலே பெரிய ஆளாக இருக்கவுமே விரும்புகின்றனர். தாங்கள் செய்கிற காரியத்தை கர்த்தர் ஏற்றுக் கொள்வாரா என்று கடுகளவும் சிந்திக்கிறதில்லை. எலிசா தனக்கு இருந்த ஏர் மாடுகளில் ஓர் ஏர்மாடுகளைப் பிடித்து அடித்து ஏரின் மரமுட்டுகளால் அவைகளை சமைத்து ஜனங்களுக்கு கொடுத்து விட்டு பின்பு சந்தோஷத்தோடே எலியாவுக்கு பின்சென்று ஊழியம் செய்தான். வருகின்ற இளம் சிறார்களாவது எலிசாவைப் போல செய்ய வேண்டும்.

பிரியமான சகோதரனே! சகோதரியே! நீ தேவ சமூகத்தில் நேரமில்லை என்று சொல்லாதே" அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்" (தானி.2 :21)"அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்" (அப்.11 : 38). அவரைப் போல நாமும் பிசாசின் பிடியிலிருக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து நன்மை செய்வோம். நமது காலங்கள் அவரது கரத்திலிருக்கிறது சங்கீதம் 31 : 15. அதிக நேரத்தை கர்த்தருக்காக செலவு செய்து அதிக ஆசீர்வாதம் பெறுவோம்.

# பாவியின் ஜெபம்

## The Sinner's Prayer

- J.C. Choate

இன்றைய நாளில் உள்ள பல பிரசங்கியார்கள் "பாவியின் ஜெபம்" என்றழைக்கும் ஒரு ஜெபத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர். அவர்களின் பிரசங்க இறுதியில், இரட்சிக்கப்படாத மக்களை மேடை முன்னால் வரச் சொல்லுகின்றனர். அவ்வாறு வருபவர்களிடம், ஏறக்குறைய கீழே குறிப்பிட்ட ஒரு ஜெபத்தை தாங்கள் சொல்லுகிறபடி திரும்பச் சொல்லச் சொல்லுகின்றனர். "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, உமது குமாரனாகிய இயேசு, என் பாவங்களிலிருந்து என்னை மீட்க சிலுவையில் மரணமடைந்தார் என விசுவாசித்து, நான் ஒரு பாவியாக உம்முன் வந்து நிற்கிறேன். என் பாவங்களை மன்னித்து, என்னை உமது பிள்ளையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இப்போது உம்மிடம் நான் வேண்டுகிறேன். இயேசுவின் நாமத்தில் இதைக் கேட்கிறேன். ஆமென். "இதன் பின்னர், யாரெல்லாம் பாவியின் ஜெபத்தைச் சொன்னார்களோ அவர்கள் அனைவரின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளாக இப்போது மாறிவிட்டனர் என அந்த பிரசங்கி அறிவிக்கிறார்.

மேலே நான் விவரித்த அந்த முறையில் ஒரே ஒரு காரியம் தவறாக இருக்கிறது. "பாவியின் ஜெபம்" என ஒன்று இருப்பதாக சுவிசேஷத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. மேலும், இப்படிப்பட்ட ஒரு ஜெபத்தை செய்வதால் ஒருவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, இரட்சிக்கப்படுவதாக கர்த்தர் வாக்களிக்கவில்லை. இது ஒரு ஜெபம் - ஒரு கொள்கை - மனிதனுடைய கற்பனையில் இது உதயமாகி உள்ளது. இப்படிப்பட்ட ஜெபத்தைச் செய்கிறவர்கள் தாங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதாக எண்ணி ஏமாந்து கொண்டு இருக்கின்றனர். அவர்கள் இரட்சிக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, ஆனால் தாங்கள் இரட்சிக்கப்பட்டதாக எண்ணி ஏமாந்திருக்கும் காரணத்தால், அவர்கள் வீழ்ந்து போவது மட்டுமின்றி, தங்களைப் போன்ற அனுபவத்தை அடைய பிற மக்களிடமும் அந்த ஜெபத்தை செய்யத் தூண்டி அவர்களையும் இரட்சிப்படையாத ஒரு நிலையில் தள்ளி விடுகின்றனர்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை கவனமாகப் படித்து, அங்கே கூறப்பட்டுள்ள இரட்சிப்பு அடைந்தவர்களின் சம்பவங்களை கவனத்தில் கொள்ளுங்கள். அங்கே ஒரு இடத்திலாவது ஒரு பாவி "பாவியின் ஜெபத்தை" சொல்லக் கேட்டுக் கொள்ளப்படுகிறானா? இரட்சிப்பின் ஒரு நிகழ்ச்சியில் கூட அப்படிப்பட்ட காரியம் குறிப்பிடப்பட்டிருப்பதை நீங்கள் காண முடியாது!

அங்கு காணப்படும் இரட்சிப்பின் அனுபவங்களில் சிலவற்றை நாம் இணைத்து பார்ப்போம். முதல் பெந்தெகொஸ்தே நாளில் (உலகமனைத்திலும் உள்ள யூதர்களை எருசலேமில் ஒன்று கூடச் செய்யும் ஒரு யூதத் திருவிழா) இயேசுவின் உயிர்ப்புக்குப் பின்னர், அப்போஸ்தலர்கள் எருசலேமில் தங்களுக்கு

வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் வல்லமையின் வருகைக்காக காத்திருந்தனர். (லூக்கா. 24 : 49 அப். 1 : 8). அந்த வல்லமையைப் பெற்ற பின், அவர்களுடைய பிரசங்கத்தை கூடியிருந்த மக்கள் தங்களுடைய சொந்த மொழியில் கேட்கத் தொடங்கினர். தேவன் அப்போஸ்தலர்கள் வழியாக கிரியை செய்தார் என்பதற்கு இது சாட்சி. பழைய ஏற்பாட்டின் தீர்க்க தரிசனங்கள் நிறைவேறிக் கொண்டிருந்தன என அவர்கள் விளக்கினார்கள்; கிறிஸ்து மனிதர்களோடு வாழ்ந்து நன்மையானவற்றைச் செய்திருந்தார்; துன்மார்க்கரால் அவர் சிலுவையில் கொல்லப்பட்டார்; கல்லறையிலிருந்து அவர் உயிர்த்தெழுந்தார்; பரலோகத்திலுள்ள பிதாவினிடத்திற்குச் சென்று, ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் அவரது வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்த மக்களில் பலர் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, இயேசுவை, கிறிஸ்து, என்று விசுவாசிப்பவர்களாகி, அவர்களிடம், "சகோதரர்களே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" எனக் கேட்டனர்.

இப்போது, பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் அவர்களிடம் என்ன சொன்னார்கள்? "விசுவாசி, உடனே நீ இரட்சிக்கப்படுகிறாய்!" அல்லது, நாங்கள் சொல்லும் "பாவியின் ஜெபத்தை" திருப்பிக் கூறுங்கள்." இல்லை, இப்படிப்பட்ட பதில்களை நாம் படிக்கிறதில்லை"! சுவிசேஷம் கூறுவது என்ன? அது சொல்கிறது. "நீங்கள் **மனந்திரும்பி**, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே **ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்**, அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2 : 38). மேலும், நாம் படிக்கிறோம் : "அவனுடைய வார்த்தையைச் **சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்**. அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்." (அப்.2 : 41). இறுதியாக நாம் படிக்கிறோம் : "தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள், இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்."

அவர்கள் திருமுழுக்குப் பெற்ற **பின்பு** வரை, ஜெபத்தைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை என்பதை இப்போது கவனிக்க முடியும்! பின்பு **தேவனுடைய பிள்ளைகளாக**, சுவிசேஷம் கூறுகிற படி: "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்." (அப். 2 : 42).

இந்த ஜனங்கள் தேவனுடைய பிள்ளைகளாக மாறுவதற்கு முன்பு அவர்கள் **தேவனுடன் ஒரு உறவில் இல்லாதிருந்தனர். எனவே சரியான முறையில் ஜெபம் செய்யக் கூடாதவர்களாக இருந்தனர்!** வேறு விதமாகச் சொன்னால், தேவன் அவர்களுடைய பிதா அல்ல, அவர்கள் அவருடைய பிள்ளைகள் அல்ல! ஆனால் கர்த்தருக்கு அவர்கள் **கீழ்ப்படிந்த பின்**, அதாவது, பாவங்களிலிருந்து மனந்திரும்பி தண்ணீர் திருமுழுக்குப் பெற்றதின் வழியாக ஒரு **புதிய பிறப்பை** அடைந்த பின்பு, சற்று முன் நாம் சொன்னது போல, அவர்கள் ஜெபம் செய்யக் கூடும், ஜெபம் செய்தார்கள்.

ஆனால் மனந்திரும்புதலின் வேறு ஒரு நிகழ்ச்சியைப் பாருங்கள். இங்கே பிலிப்பு எத்தியோப்பிய நாட்டானாகிய ஒரு மனிதனை பாலைவனப் பகுதியில் சந்திக்கிறான். அந்த எத்தியோப்பியன் தொழுகைக்காக எருசலேமுக்குச் சென்று விட்டு, தனது ரதத்தில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது, ஏசாயா 53ம் அதிகாரத்தைப் படித்துக் கொண்டிருக்கிறான். தான் படிப்பதைப் புரிந்து கொண்டானா என்று பிலிப்பு கேட்ட போது, அந்த எத்தியோப்பியன் பிலிப்புவை தன்னுடன் அழைத்து தனக்குக் கற்றுத் தர வேண்டுமென்று கூறுகிறான். பிலிப்பு சுவிசேஷத்திலிருந்து அவனுக்கு இயேசுவைப் பற்றி விளக்கிச் சொல்லி, கற்றுக் கொடுக்கும் போது, வசனம் கூறுவது போல, "இவ்விதமாய் அவர்கள் வழி நடந்து போகையில், தண்ணீருள்ள ஒரு இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி; இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் **ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன** என்றான். அதற்குப் பிலிப்பு : நீர் முழு இருதயத்தோடும் **விசுவாசித்தால்** தடையில்லையென்றான். அப்பொழுது அவன் **இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்** என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; **பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்;** அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய் விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்!". (அப்.8 : 36 - 39). இங்கு ஜெபத்தைப் பற்றி எதுவுமே சொல்லப்படவில்லையென்பதை நீங்கள் கவனிப்பீர்கள். ஏனென்றால் இந்த மனிதன் தேவனுடைய ஒரு பிள்ளை அல்ல. முதலில் அவன் இரட்சிக்கப்பட கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியமாக இருந்தது. தேவனுடைய பிள்ளை என்ற உறவை உண்டாக்கிய பின்னரே அவரிடம் ஜெபிக்க முடியும்.

யோவான் 9ம் அதிகாரத்தில் பிறவிக் குருடனான ஒரு மனிதனுக்கு இயேசு எப்படி அற்புதமாக பார்வையை அளித்தார் என்ற சம்பவத்தைப் பார்க்கிறோம். பின்னர், அதே மனிதன் சொன்னான் : "பாவிகளுக்குத் தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார்." (யோவான். 9 : 31). வேறு விதமாகக் கூறின், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட சுவிசேஷம் தெளிவாகக் கூறுவது போல, **ஜெபம் ஒருவனை இரட்சிப்பதில்லை** அல்லது தேவனுடைய பிள்ளையாக மாற்றுவதுமில்லை. மாறாக, தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனே கிறிஸ்தவனாகிறான். அப்போஸ்தலருடைய நடபடி புத்தகத்தின் மனந்திரும்பும் நிகழ்ச்சிகளில் ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என நாம் பார்த்திருக்கிறோம். யோவான் 8 : 42 - 47 வசனங்களில் பிசாசின் பிதாக்களைப் பற்றி பேசினார். ஒரு பாவி, ஜெபத்தினால் மட்டும் இரட்சிக்கப்படக் கூடுமானால், தேவனுடைய பிள்ளைக்கு பாவியை விட என்ன அனுகூலம் உள்ளது? ஒன்றுமே இல்லையே. ஆனால் தேவனுடைய பிள்ளையாக மாற, "பாவியின் ஜெபத்தில்" ஒரு இடமும் இல்லை. பதிலாக, ஒருவன் **விசுவாசிக்கவும், இரட்சிக்கப்படும்படி திருமுழுக்குப் பெறவும்** வேண்டும் என்று கிறிஸ்து கூறினார்.

# The Heavens Declare!

# வானங்கள் வெளிப்படுத்துகிறது!

பெண்கள் பகுதி

Betty Burton Choate

அறிவியல் கண்டுபிடிப்புகளின் விளைவாக, நாம் பிரபஞ்சம், பூமி மற்றும் நம்முடைய உடல்கூறுகளை குறித்த பலவற்றை அறிகிறோம். அறிவுள்ள மக்களின் களைப்பில்லாத ஆராய்ச்சியில்லாமல் நாம் இவைகளை அறிந்திருக்க முடியாது. அபிப்பிராயம் உருவாகியுள்ளது :

"நாம் சுழற்சியின் இருபத்து - நான்கு மணியிலிருந்து ஒரு பகலையும் ஒரு இரவையும் பெற வேண்டுமானால், பூமியானது ஒவ்வொரு இருபத்து-நான்கு மணி நேரமும் ஒரு முழு சுழற்சியை முடிக்க வேண்டும். புவியிடைக் கோட்டின் வட்டத்தின் சுற்றளவில் பூமி 24,000 மைல்களைக் கொண்டுள்ளது. இருபத்துநான்கு மணி நேரங்களில் இந்த 24,000 மைல்களைக் கடப்பதற்கு புவிநடுக்கோட்டின் மேல் ஒவ்வொரு டிகிரியும், ஒவ்வொரு நபரும் ஒரு மணிநேரத்திற்கு 1,000 மைல்கள் வேகத்தில் நகருகின்றனர்.

"...நம்முடைய பகல் இரவு சுழற்சி நம்முடைய மிகப்பெரிய பயணத்தின் ஒரு சிறுபகுதியாகவே இருக்கிறது. வருடம் முழுவதும் 365 நாட்களை அடைய, பூமியானது சூரியனை ஒரு செகண்டுக்கு 20 மைல்கள் வேகத்தில் சுழன்று வருகிறது. முழுச் சூரியக்குடும்பமும், நாமும்கூட, நம்முடைய ஆகாயத்திலுள்ள நட்சத்திரக் கூட்டமான பால்வீதி மண்டலத்தின் மத்தியில் பத்து மடங்கு வேகத்தில் மோதி சுழன்று கொண்டிருக்கிறது.. இவற்றின் ஏதாவது ஒன்றினை உங்களால் உணர முடிகிறதா? ("The science of God by Gerald L.Schroeder).

இதைப் பற்றி ஆழ்ந்த யோசனை செய்யுங்கள் :- உண்மையான அறிவியல் என்பது உண்மையாகவே மனதின் மற்றும் தேவனுடைய கிரியைகளின் ஒரு ஆழ்ந்த எப்பொழுதும் விஸ்தாரமான ஒரு ஆராய்ச்சியாக இருக்கிறது!

நிச்சயமாக, "டார்வினின் பரிணாமக் கொள்கை" தந்திரமான ஒன்று, மேலும் பல எண்ணற்ற காரியங்களை அறிவியல் தெரிவித்திருக்கிறது. பவுல் தீமோத்தேயுவை, "சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு" என எச்சரித்தார் (1 தீமோ. 6 : 20). எனவே அறிவியல் என்ற பெயரில் வருகிற ஒவ்வொரு கூற்றினை உண்மையென நாம் ஒத்துக்கொள்ளக் கூடாது; நாம் ஜாக்கிரதையுள்ளவர் களாயிருந்து தேவனுடைய வார்த்தையிலுள்ள தெளிவான போதனைகளுக்கு முரண்பாடாயிருக்கும் ஒன்றையும் விசுவாசிக்கக் கூடாது.

எல்லாக் கிரியைகளுக்கும் ஆரம்பமாகவும், ஆதியாகவும் இருக்கிற தேவனை நாம் காண்போம் என்ற தேவனுடைய ஜனங்களாக வாழ்கின்ற நம்மனைவருக்கும் - விசுவாசிக்கிறவர்களாகிய நம்மனைவருக்கும் எப்போதும் இவை இருக்குமா, அறிவியல் எந்த அதிசயங்களை விளக்கிக் கூறினாலும், நமக்கு தேவன்தான் அஸ்திபாரக்கோடு. முதலாவது தேவனுடைய மனதில் உருவாகியிருந்த படியினால் இந்த அதிசயக் கிரியைகள் காணப்படுகின்றன, பின்பு அவைகள்

அவருடைய வார்த்தையின் வல்லமையின் மூலம் வெளிப்படையான இயற்கைக் கூறுகளாக சரீரப் பிரகாரமாக கொண்டு வரப்பட்டன.

உண்மையாயிருக்கிற அந்த அறிவியல் கண்டுபிடிப்புகள் மூலம் தேவனைப் பற்றிய எத்தனை அதிசயமானவைகளை நாம் கற்றுக் கொள்கிறோம்!

இது, பூமியானது இருக்கிற வண்ணமாகவே தன்னிச்சையாக நிலைத்திருக்கிறது - மரத்தின் மீது காற்று வீசுகின்ற ஒரு மரக்கிளையைப் போலல்லாது - தன்னிச்சையாக ஒரு மணிநேரத்தில் ஆயிரம் மைல்கள் சுற்றி வந்துக் கொண்டிருக்கிறது என நினைக்கும்படி என் மனதைத் தட்டியெழுப்புகிறது! அத்துடன் பூமி தானாகவே ஒரு கிரகத்தின் அச்சில் முன்னோக்கி தள்ளிக் கொண்டு சூரியனை ஒரு மணிக்கு 72,000 மைல்கள் வேகத்தில் சுற்றி வருகின்றது! மேலும் சூரிய குடும்பமானது ஒரு முழுக் குடும்பத்தைப் போல் ஆகாயத்திலுள்ள நட்சத்திரக் கூட்டமான பால்வெளி மண்டலத்தில் மணிக்கு 720,000 மைல்கள் சுழன்று சுற்றி வந்துக் கொண்டிருக்கிறது! அறிவியல் அறிஞர்கள் முழுபால்வெளி மண்டலமும் கூட விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கின்றன என நிச்சயமுடையவர்களாயிருக் கிறார்கள்! இருந்த போதிலும் இதில் ஒன்றையும் நாம் உணருவதில்லை!

இது உண்மையாக இருக்குமானால் - இது உண்மையாகக் காணப்படுமானால் எவ்வளவு சிறந்த ஆரம்பம்! எவ்வளவு பெரிய வல்லமை! எவ்வளவு பெரிய அறிவாற்றல்! எவ்வளவு சிறந்த நித்தியமான ஒன்று!

மிக அதிகமான அறிவாற்றல் உடைய அறிவியல் அறிஞர்கள் பொருளின், விண்வெளியின், காலத்தின் மனித அறிவுக்கெட்டாத மறைபொருட்களை சிக்கலிலிருந்து விடுவிக்கும்படிக்கு போராடுகையிலும், ஒரு உயிர்வாழ்வனவற்றை அடையாளங்கண்டு பிடிப்பதில் ஏற்படும் ஒவ்வொரு சிறிய முன்னேற்றத்தினையும் புகழ்கின்ற பொழுதிலும், மேலும் ஒருவேளை என்ன இது செய்கிறது என்பதில் அனுமானிக்கிறதிலும், எப்படி இது செய்கிறது, என்ன செய்கிறது என்பதைக் குறித்து அதிசயிக்கையிலும், கடினப்பட்டு உழைத்து கற்றுக் கொள்ளும்படி பல வருடங்களும், காலங்களும் காத்திருந்தும் பல குறிப்புகளை பெற முடியாமல் இழந்திருக்கையிலும் - இவைகளையெல்லாம் விஞ்ஞானிகள் செய்கிற வேளையிலும் - தேவன் அமைதியாக அவர்களுடைய முயற்சிகளையும், கண்டுபிடிப்புகளையும் அவருடைய மகிமையான சிங்காசனத்திலிருந்து உற்று நோக்கிக் கொண்டிருக்கிறார். அவர் திட்டமிட்ட அதிசயங்களை எல்லாவித சிக்கல்களோடும், அதிசயங்களின் ஆழங்களோடும் அவர்கள் ஆராய்கின்றனர்; அவர் அவற்றை அந்தந்த இடத்தில் வைத்திருக்கிறார்; அவர் அவற்றின் தொடர் ஓட்டத்தையும் காலம் காலமாக தொடர்ந்து இயங்கும் இயக்கத்தினை நிலைநிறுத்தியிருக்கிறார்.

மனிதர்கள் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தினை அறியும் தங்களுடைய விருப்பத்தில் அவருடைய படைப்பு, வல்லமை போன்றவற்றின் சிலவற்றையே கற்றுக் கொண்டிருக்கின்றபடியினால், அவர் கவனிக்கிறார், காத்திருக்கிறார் மேலும் நிச்சயமாக அவர் நகைக்கிறார்!

உண்மையாகவே, "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்து கிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது". (சங்கீதம் 19 : 1, 2)

- தமிழில் குளோரி அர்ஜுனன்

சிறுவர் பகுதி

# நம்பிக்கையற்ற சீஷர்கள்

வேத பகுதி : மாற்கு 16:1—14



மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்ற மூன்று பேரும் இயேசுவின் கல்லறைக்கு சுகந்தவர்க்கமிடும்படி அவைகளை எடுத்துக் கொண்டு வாரத்தின் முதல்நாள் ஞாயிற்று கிழமை அதிகாலையிலே சென்றாங்க. அப்பொழுது கல்லறை வாயிலில் இருக்கிற கல்லை யார் தான் நமக்காக புரட்டித் தள்ளுவாங்க என்று சொல்லிக் கொண்டே போனாங்க. அங்கே போய் பார்த்தா! கல்லறையில் இருந்த கல் புரட்டப் பட்டிருந்தது. உடனே உள்ளே சென்றாங்க, அங்கே வெள்ளையங்கி தரித்த ஒரு வாலிபன் வலது பக்கத்திலே உட்கார்ந்திருப் பதைக் கண்டு பயந்தாங்க. எப்படி யிருக்கும் நீங்களே யோசித்துப் பாருங்க. நமக்கே பயமா இருக்கு, இல்லையா?

பின்பு அந்த வாலிபன் இயேசுவைத் தேடுகிறீர்கள் அவர் உயிர்த்தெழுந்தார் அவர் இங்கே இல்லை. நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்குச் சென்று இவைகளை அறிவியுங்கள் என்றான். அவர்களோ பயப்பட்டபடியால் ஆளைவிட்டா போதுமப்பா என்று கல்லறையை விட்டு ஓடோடிப் போனார்கள். ஒருவருக்கும் ஒன்றும் சொல்லவில்லை. வாரத்தின் முதல்நாள் அன்று இயேசு முதல் முதல் மகதலேனா மரியாளுக்கு தரிசனமானார். அவள் இயேசுவை கண்ட செய்தியை துக்கப்பட்டு அழுது கொண்டிருக்கிறவர்களுக்கு அறிவித்தாள். சீஷர்களோ நம்பவில்லை. ஒரு கிராமத்துக்கு நடந்து போகிற இருவருக்கு இயேசு தம்மை வெளிப்படுத்தினார். அவர்களும் போய் அவர்களுக்கு அறிவித்தார்கள் அதற்கும் நம்பவில்லை.

அதன்பின்பு பதினொருவரும் போஜனபந்தியிலிருக்கும் போது அவர்களுக்கு இயேசு தரிசனமாகி உயிர்த்தெழுந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற் போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும் இருதய கடினத்தைக் குறித்தும் அவர்களைக் கடிந்து கொண்டார்.

நாமும் சில வேளைகளில் கர்த்தர் செய்த நன்மைகளை யாராவது நமக்கு சொல்லும் போது அதை நாம் நம்புவதில்லை. இப்படி நம்பாம இருந்தா நம்மையும் நம்முடைய அவிசுவாசத்தைக் குறித்தும் கர்த்தர் கடிந்து கொள்வார். ஆகையால் நாம் நம்பிக்கையுள்ள பிள்ளைகளாய் மாறுவோம்.

## மனப்பாட வசனம்

"விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" (ரோமர் 14 : 23)

# சந்திப்போம்-சிந்திப்போம்

உரையாடல் – 14

D. எபிநேசர்

*தாவீது* : ஸ்தோத்திரம் யோனத்தான். இன்று அறிக்கையிடுதல் பற்றி தொடர்ந்து பேசப் போகிறோம் இல்லையா?

*யோனத்தான்* : ஆமாம் தாவீது. எனக்கு மட்டுமல்ல, என்னைக் குழப்பிய அவங்களும் புரிஞ்சுக்கிற மாதிரி தெளிவா எடுத்துச் சொல்லு.

*தாவீது* : இரட்சிப்பு என்பது தேவனுக்கும் மனிதனுக்கும் இருந்த உறவைப் புதிப்பிப்பது, மனிதர்களிடம் பாவமன்னிப்பு பெற்றால் தான் இரட்சிப்பு என்பது அபத்தமானது. வேதத்தில் அதற்கு ஆதாரம் இல்லை. அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில் எத்தியோப்பிய மந்திரி வசனத்தைக் கேட்டவுடன் விசுவாசித்து மனந்திரும்புகிறார். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று சொல்லி அறிக்கையிடுகிறார். (அப்.8 : 37) பாவ அறிக்கையைப் பற்றி பிலிப்பு அவரிடம் எதுவும் சொல்லவில்லை. ஒருவேளை சொல்லியிருந்தால் அந்த மந்திரி இரதத்தை எத்தியோப்பியாவுக்கல்லவா திருப்பச் சொல்லியிருப்பார்? ஆனால் ஞானஸ்நானம் பெறும்படி தண்ணீருள்ள ஒரு இடத்துல இரதத்தை நிறுத்தச் சொல்றாரே! அதுபோக, இரட்சிக்கப்பட்ட எந்த சம்பவங்களிலும் பாவ அறிக்கை வலியுறுத்தப்படவில்லை. சுவிசேஷம் பிரசங்கிக்கப் படுகிறது. கேட்டவர்கள் உடனடியாக ஞானஸ்நானத்தில் கீழ்ப்படிகிறார்கள். மன்னிப்புக் கேட்பதற்காக இரட்சிப்பை யாரும் தள்ளிப் போடவில்லை.

*யோனத்தான்* : அப்படீனா பாவ அறிக்கையே செய்ய வேண்டியதில்லையா?

*தாவீது* : செய்யலாம். இரட்சிப்புக்கு முன்போ பின்போ நாம் நம்முடைய தவறுக்காக வருந்தி அவர்களோடு ஒப்புரவாகிக் கொள்ளலாம். ஆனால் இரட்சிப்புக்கு அது அவசியம் என்று வலியுறுத்த முடியாது. இயேசுவை அறிக்கையிடுவது அவசியம் என்று தான் வேதாகமம் வலியுறுத்துகிறது.

ரோம 10 : 9, 10. மத். 10 : 32 1. யோவா 4 : 2.

*யோனத்தான்* : இயேசுவை நாம் ஏன் பகிரங்கமாக அறிக்கையிட வேண்டும்? நான் அவரை ஏற்றுக் கொண்டது எனக்கும் அவருக்கும் மட்டும் தெரிந்தால் போதாதா?

*தாவீது* : இதுவும் ஒரு நல்ல கேள்வி தான். கர்த்தருக்குச் சித்தமானால் இது பற்றி நாம் அடுத்த முறை பேசுவோம்.

(மீண்டும் சந்திப்போம்)

# கிறிஸ்தவ ஓட்டம் - 2

P.R. சாமி



எபிரேயருக்கு எழுதின நிருபம், மனுக்குலத்திற்கு இயேசு எப்படிப்பட்டவர் என்பதை தெளிவாக்குகிறது. மோசேயின் நியாயப் பிரமாணத்தினூடே கிறிஸ்துவை பார்ப்பதைப் போல, இந்த நிருபம், மேலெழுந்தவாரியாக பழைய ஏற்பாட்டிலுள்ள, மோசேயின் நியாயப் பிரமாணத்தில் காணப்பட்ட, ஆலயத் தொழுகை, பலிகள், பலி பீடங்கள், ஆசாரியர்கள், ஆசாரிய முறைமைகள் பற்றி கூறப்பட்டிருந்தாலும், உண்மையிலே, விசுவாச சோதனைக்குட்பட்டிருந்த யூத கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டதேயாகும். அவர்கள் சோதனையினி மித்தம் பின்வாங்கி, கிறிஸ்துவை விட்டு வழிவிலகி செல்லும் அபாயக் கட்டத்தில் இருந்தனர். திரும்பி யூத மார்க்கத்திற்கே சென்று விடலாம் என்று எண்ணி இருந்தனர். கிறிஸ்தவ விசுவாசத்திற்கும், சபைக்கும் ஒரு பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. அந்தச் சமயத்தில் தான், இந் நிரூபம் தெளிவான, ஆனால் வல்லமையான போதனைகளுடன் வந்தது. எபிரேயருக்கு எழுதின நிரூபத்தின் மைய கருத்து இது தான். ரட்சிப்பு, ஆபிரகாம் மூலமாகவோ, மோசேயின் மூலமாகவோ இல்லை. கிறிஸ்து ஒருவர் மூலமாக மட்டுமே, இயேசு கிறிஸ்து ஒருவரே, தேவத்துவத்தின் பரிபூரணத்தை மனிதனுக்கு கொண்டு வருகிறவர். கிறிஸ்துவுக்கு முன்பு பேசிய தீர்க்கதரிசிகளும், கிறிஸ்துவுக்கும் வித்தியாசம் உண்டு. பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களோடு பேசிய தேவன், இந்த கடைசி நாட்களில் தம் குமாரனாகிய கிறிஸ்து மூலமாய் பேசுகிறார் அவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார் என்கிறார் எபிரேயருக்கு எழுதின ஆசிரியர்.

மேலும், அதன் ஆசிரியர், கிறிஸ்து, தேவதூதர்களைக் காட்டிலும் விசேஷித்தவர் என்றார். இயேசுவை நம் முழுமையான, பிரதான ஆசாரியராகப் படைக்கிறார். அவர் தேவனாக இருந்து, மனிதனாக அவதரித்து வந்ததால், பலவீனமுள்ள பாவியை ரட்சிக்க அவரால் கூடும். இன்று கிறிஸ்தவன் கிறிஸ்துவின் மூலமாக அந்த புதிய ஏற்பாட்டுக்குள் வருகிறான். தேவனிடத்தில் நம்மை சேர்க்கும் அந்த ஒரே வழி கிறிஸ்து ஒருவரே என்பதை தெள்ளத் தெளிவாக்குகிறார் இந்த நிரூபத்தின் ஆசிரியர். பழைய நியாயப் பிரமாணமும், அதன் ஊழியமும், வரப் போகிற காரியங்களுக்கு அதாவது கிறிஸ்துவுக்கு நிழலாக இருந்தது என்கிறார். ஆகவே தான் கிறிஸ்துவை அசட்டை பண்ணுகிறவனுக்கு எந்தவித நம்பிக்கையும் இல்லை. நியாயத் தீர்ப்பும், ஆக்கினையும் தான் காத்திருக்கும் என்கிறார்.

11ம் அதிகாரத்தில் விசுவாச வீரர்களின் நீண்ட பட்டியலை கொடுத்து அவர்கள் எப்படி விசுவாசத்தை காத்து கொண்டனர், அந்த பரிசுத்தவான்கள் எப்படி தங்கள் விசுவாச ஓட்டத்தை ஓடி, வெற்றி பெற்றனர் என்பதையும் கூறிவிட்டு, அவ்வண்ணமாகவே கிறிஸ்தவனும் தன் விசுவாசத்தை காத்துக் கொண்டு, ஓட்டத்தை ஓடி முடிக்கக் கடவன் என்று உற்சாகப்படுத்துகிறார். அப்படி கிறிஸ்தவன் தன் விசுவாச ஓட்டத்தை ஓடும் பொழுது கிறிஸ்துவே அவனுக்கு குறிக்கோளாக இருக்கிறார். கிறிஸ்தவன் தன் முழு ஓட்டத்தையும் ஓடி முடிக்கக் கடவன். இல்லாவிட்டால் அவன் குறி தவறுகிறவனாயிருப்பான். அவன், தான் ஒருவன் மட்டும் தனியாக ஓடுவதில்லையே. இந்த விசுவாச ஓட்டத்தை வெற்றியுடன் முன்பு ஓடி முடித்த திரளான சாட்சிகள் உண்டு. ஆகவே, கிறிஸ்தவனும் நித்திய ஜீவனாகிய, வாடாத கிரீடத்தைப் பெற, சாத்தானை எதிர்த்து, பல எதிர்ப்பு, முட்டு கட்டைகளை தகர்த்து, வெற்றியுடன் விசுவாச ஓட்டத்தை ஓடி முடிக்கக் கூடும் என்பதை அருமையாக வலியுறுத்துகிறார். பவுலும் கூட, "முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது என்கிறார். அது எதற்காக என்றும் குறிப்பிடுகிறார். தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும் படிக்கு என்கிறார். கிறிஸ்தவர்களுக்கு கிடைக்கிற எவ்வளவு பெரிய சிலாக்கியம் பாருங்கள். மனிதனுடைய ரட்சிப்பை தேவன் அருளிச் செய்வதற்கு காரணமாயிருக்கிற வேத வசனங்களின் மீது தனக்குள்ள நம்பிக்கையை பவுல் வெளிப்படுத்துகிறார். வேதவசனம், ஒரு விசுவாசிக்கு கொடுக்கின்ற ஆறுதலின் விளைவே பொறுமை. கிறிஸ்தவனுடைய ஆறுதல், பொறுமை இவற்றுக்கு அடிப்படை அந்த நம்பிக்கை, தைரியம். அது என்னவென்றால் முடிவாக தேவன் பலனளிப்பார் என்பதே. இன்னொரு வசனத்தில் பவுல், இதேவிதமாக, கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்துகிறார். கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில் 10-ம் அதி 11-ம் வசனத்தில், "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது. (பழைய ஏற்பாட்டு அனுபவங்களை குறிப்பிடுகிறார்). உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" என்றார். கீழ்ப்படியாத இஸ்ரவலேர்கள் எப்படி தண்டிக்கப்பட்டனர், விசுவாசமாயிருந்தவர்களோ நல்ல பலனை பெற்றார்கள் என்பதை கிறிஸ்தவர்கள் புரிந்து கொண்டு, தாங்களும் விசுவாசத்தில் நிலைத்திருக்க புத்தி சொல்கிறார்." விசுவாசத்தில் நிலைத்திருப்பதை விடாமுயற்சியை, இங்கு வலியுறுத்துகிறார். மேலும், பவுல் கூறுகிறார், "ஆதலால் எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக".

இப்பொழுது எபிரேயருக்கு எழுதின நிருபத்துக்கு வாருங்கள். எபி 12-ம் அதிகாரத்தில் முதல் வசனம் "ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தை துவக்குகிறவரும்,

முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்". இங்கு எபிரேய ஆசிரியர் கூறும் கருத்து, இவ்வளவு திரளான விசுவாச வீரர்களின் மாதிரிகள் ஒரு கிறிஸ்தவனை தானும் அப்படிப்பட்ட விசுவாச ஓட்டத்தை ஓடி நித்திய ஜீவகிரீடத்தை பெற அவனை உந்தித் தள்ளும் என்கிறார். ஆபிரகாமும், இன்னும் மற்றவர்களும், அசைக்க முடியாத பெரிய தடைகளுக்கு எதிராக, தங்கள் ஓட்டத்தை ஓடினர். கிறிஸ்துவே நம் விசுவாசத்தை துவக்குகிறவர் நம் ஜீவியத்திற்கு மாதிரியும் அவரே. கிறிஸ்தவனுடைய விசுவாச ஓட்டம், ஒரு ஓட்டப் பந்தயத்துக்கு சமமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஒலிம்பிக் என்று சொல்லுகிற உலக போட்டிகளில் வெற்றி பெறுபவர்கள், போற்றத்தக்க தங்க கோப்பைகளையும் விருதுகளையும் பெறுவார்கள். ஆனால் கிறிஸ்தவனோ வாடாத ஜீவ கிரீடத்தை பெற ஓட வேண்டியவனாக இருக்கிறான். உலக போட்டிகளில் மற்றவனை தோற்கடித்து விட்டு, தான் மட்டும் பரிசு பெறுவான், வெற்றி பெற்றவன். ஆனால் கிறிஸ்தவ ஓட்டத்தில் ஒவ்வொருவனும் வெற்றி பெற வாய்ப்பு உண்டு. இருப்பினும் எல்லாரும் வெற்றி பெறுவார்களா என்பது இன்னும் கேள்விக் குறியாகவே இருக்கிறது? ஏன் அப்படி சொல்லுகிறேன் என்றால், நம்முடைய எதிராளியான பிசாசானவன் எவனை விழுங்கலாமோவென்று கெர்ச்சிக்கிற சிங்கம் போல வகைதேடி, சுற்றித் திரிகிறான் என்றும், அவன் தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே என்றும் வேதம் எச்சரிக்கிறது. கிறிஸ்தவ ஜீவியம் என்பது, ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை நோக்கி நம் முழு ஜீவியத்தால் ஓடுகிற ஓட்டம். இஸ்ரவேலர்கள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தை நோக்கி, வனாந்திரத்திலே பயணம் செய்தார்களே அதைப் போல "மேகம் போன்ற இவ்வளவு திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்க" என்கிறார் எபிரேய ஆசிரியர். கிறிஸ்தவர்களும், தாங்கள் கிறிஸ்தவ ஓட்டத்தை ஓடும் போது, திரளான பேர் அவர்களை சூழ்ந்து இருப்பதை உணர வேண்டும். இன்றும் கூட உலக போட்டிகளிலும், ஆசிய விளையாட்டுகளிலும் லட்சக்கணக்கான பேர் சூழ்ந்து கொண்டு, விளையாட்டு வீரர்களை, கைதட்டி, ஆரவாரம் செய்து, பாராட்டுவதை பார்க்கிறோம்.

பழங்கால உலக விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்கின்ற வீரர்கள், பெருவாரியான மக்கள் தங்களை பார்த்துக் கொண்டிருப்பதையும் அறிந்திருப்பார்கள். அத்துடன் அவர்களைப் போலொத்த, இதற்கு முன் கலந்து கொண்டு பரிசை பெற்ற, சாம்பியன் வீரர்கள், அங்கு தங்களை கவனித்துக் கொண்டிருப்பதையும் உணரத் தவற மாட்டார்கள். இவர்கள் வெறும் கவனிக்கிறவர்கள் மட்டும் அல்ல. அப்போதைய வீரர்கள் வெற்றி பெறுவதற்கு தங்களையே சாட்சிகளாக வைக்கின்றனர். ஏனெனில் இவர்கள் ஏற்கெனவே ஓடி, வெற்றி பெற்றவர்கள். எபிரேய ஆசிரியர், கிறிஸ்தவ ஓட்டத்தை இந்த பழம் பெரும் விசுவாச வீரர்கள் மறைவாக நின்று கவனிக்கிறார்கள் என்றும் நீங்களும் எங்களைப் போலவே ஓடி, வெற்றி பெற வாழ்த்துகிறோம் என்று கூறுவதைப் போலவும் சித்தரிக்கிறார். அந்த வீரர்களின் முன்மாதிரி நிச்சயமாக கிறிஸ்தவனை உற்சாகப்படுத்தும். எபிரேய ஆசிரியர், 11-ம் அதிகாரத்தில் குறிப்பிட்ட வீரர்களை காட்டிலும் உங்கள் தைரியம், விசுவாசம் குறையக் கூடாது என்று கிறிஸ்தவர்களுக்கு சொல்லுகிறார். அவர்கள் வைத்த முன் மாதிரி இது தான். யார்

ஒருவன் தேவனிடத்தில் விசுவாசமாயிருந்து, அவருடைய கட்டளைகளில் கீழ்படிந்து நடக்கிறானோ, அவன் வெற்றி பெறுவது சாத்தியம்.

எபிரேய கிறிஸ்தவர்படுகிற கஷ்டங்கள், உபத்திரவங்கள், அந்த விசுவாச வீரர்களுக்குத் தெரியும். ஏனெனில் அவர்களும் அதே விதமாக தங்கள் விசுவாசத்திற்காக போராடியவர்கள், பாடுகளை அனுபவித்தவர்களாயிற்றே. ஆகவே, எபிரேய ஆசிரியர், எபிரேய கிறிஸ்தவர்களைப் பார்த்து, நீங்களும் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினாலே பரலோகம் செல்ல முடியும். அவர்கள் பின்மாற்றம் அடையலாம் என்ற பயம் எபிரேய ஆசிரியருக்கு இருந்தது. அதனால், மிகுந்த பலனுக்கேதுவான தைரியத்தை விட்டு விடாதீர்கள். பொறுமை உங்களுக்கு வேண்டி இருக்கிறது. நின்று விடாதீர்கள் ஓடிக் கொண்டே இருங்கள் என்றார்.



## வேத அறிவுப்போட்டி எண் 37ல் வெற்றிபெற்றவர்கள்

1. S. தண்டபாணி - சிலுவத்தூர்
2. P.அலீஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
3. Mrs. ஜாஸ்மின்வின்சென்ட்ராஜ் - மதுரை
4. P.S.லலிதாபிரேமகுமாரி - மதுரை
5. S. ராஜபிரசாத் - மதுரை
6. S. சாமுவேல் - மூணார்
7. S. ஆனந்தராஜ் - ஈரோடு
8. Mrs. கிரேஸ்லூயிஸ் - நிலக்கோட்டை
9. V. சரவணகுமார் - கோவை
10. A. மேரியம்மாள் - மதுரை
11. J.S. நிர்மலாஜான் - மதுரை
12. A. சேவியர்மேரி - மதுரை
13. V. கோவலன் - மதுரை
14. P. மகாலிங்கம் - கப்பலூர்
15. G. மெர்சிரூபி - கொடுவாய்
16. A. ரெபேக்காள் - மதுரை
17. Mrs.எஸ்தர்சேகர் - G.N.பாளையம்
18. R. செந்தில்குமார் - திடுமல்
19. V. கமலம் ஜோசப் - சங்ககிரி
20. Mrs.வனிதாசாமுவேல் - கொடைரோடு
21. Mrs.எஸ்தர்ஹென்றிமோகன் - கேத்தி
22. R. சாமுவேல் - ஊதியூர்
23. Mrs. குளோரி பவுல்சர் - சென்னை
24. G. ஜெயசிங் - சென்னை
25. P.M.சர்மா - அரக்கோணம்
26. C. அன்புராஜ் - K. கிரனூர்
27. N. பொன்னி - மதுரை
28. L. மனாசே மண்ணு - சித்தூர் (A.P.)
29. D. சமாதானராஜா - செட்டிபாளையம்
30. P.M. சத்தியவாசகன் - பனமரத்துப்பட்டி
31. T. வேலுச்சாமி - ஜோடார் பாளையம்
32. A. ஜோதிகாந்தம் - பாண்டியநல்லூர்
33. K.ராஜேந்திரன் - புதுபாளையம் (கோபி)
34. G.P. ஏசையன்ராஜ் - சிலுவத்தூர்
35. N. கஸ்தூரிகிறிஸ்டி - திருவண்ணாமலை
36. D. ஏசுதாஸ் - சித்தூர் (A.P.)
37. N.கமலவேணிகண்ணையன் - சென்னை
38. R. கலாவதி ராஜா - P. சத்திரப்பட்டி
39. T. சத்தியசீலன் - மலையடிபட்டி
40. S.R. பெரியசாமி - சேளூர்
41. S. சரவணபவன் - ஓசூர்
42. P. கந்தசாமி - K. கிரனூர்
43. S. அகிலா சுந்தரம் - நங்கவள்ளி
44. M. லேயாள் - பத்தலபள்ளி (A.P.)
45. N. ஜேம்ஸ் - செட்டிபாளையம்
46. K. பிரஜீதா - ஈரோடு
47. A. முத்து - பொங்களூர்
48. M. ரோஸ்மேரி - சென்னை
49. L. ஐசக் - வீரணம்பாளையம்
50. Mrs. ஜெயந்திநோயல் - சேலம்
51. T.P. பிரபாவதி - சேலம்

37 முதல் 48 வரை நடைபெறும் வேத அறிவுப் போட்டியில் கலந்து கொண்டு இம்முறை முதல் இடத்தை அடைய வேண்டும் என்ற இலட்சியத்தோடு முயற்சி செய்யும் யாவரையும் வாழ்த்துகிறோம். உங்கள் இலட்சியம் வெற்றியடைய ஜெபிக்கிறோம்.

# அன்பு கூருதல்

**J. David Williams**

- சென்ற மாதத் தொடர்ச்சி

### 3. பிறனிடத்தில் அன்பு கூருதல்:-



உன்னிடத்தில் அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கின்றார் (மத்தேயு 19 : 19). இயேசு கிறிஸ்துவை சோதிக்கும்படி நியாயசாஸ்திரி ஒருவன் கற்பனைகளில் எந்த கற்பனை பிரதானமானது என கேட்டான். அதற்கு இயேசு உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பெலத்தோடும் அன்பு கூருவாயாக இதுவே முதலாம் கற்பனை அதாவது பிரதான கற்பனை. இதற்கு ஒப்பான அல்லது இணையான ஒரு கற்பனை என்னவென்றால், நீ உன்னிடத்தில் அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என வலியுறுத்தி கூறி இவை இரண்டிலும் நியாய பிரமாணம் முழுவதும் அடங்கியுள்ளது என்றார். நாம் எவ்வளவு தான் வேதத்தை அறிந்திருந்தாலும், தேவனில் அன்பு கூருகிறவராயிருந்தாலும், நாம் பிறனிடத்தில் அன்பு கூர தவறினால், தேவன் நமக்களித்த கட்டளைகளை மீறினவர்களாவோம். நாம், நமது, என தன்னை குறித்தும், நம்மை சார்ந்தவரைக் குறித்தும், எப்படி அன்பு கூருகின்றோமோ, அவ்வண்ணமே நாம், பிறனிடத்தில் அன்பு கூர வேண்டும். அப்படி செய்வது அவருடைய கற்பனைகளை கைக் கொள்ளுவதற்கு ஒப்பாகும். உங்களை நேசிக்கிறவர்களையே நீங்கள் நேசிப்பீர்களானால் உங்களுக்கு பலன் என்ன?

ஆயக்காரரும் அப்படி செய்கின்றார்களே, லூக்.10 : 27 பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதா பூரண சற்குணராயிருக்கிறது போலவும், அவர் நீதியுள்ளவர் மேல் தமது சூரியனை உதிக்க செய்கிறது போலவும், மழையை வருவிக்க பண்ணுகிறது போலவும் நாமும் பூரண சற்குணராயிருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து பிறனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அநேக ஆத்துமாக்களை வென்றார். ஒருமுறை இயேசு எரிகோ பட்டணத்தின் வழியாய் போகையில், பாவியான மனுஷனும், வரி வசூலிப்பவனுமான சகேயு எனப்பட்ட மனுஷன் தன்னை காண வேண்டும் என காட்டத்தி மரத்தின் மீது உட்கார்ந்து இருப்பதை அறிந்து, அவர், அவனை நோக்கி சகேயுவே இறங்கி வா, இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டும் என்றார். அவன் குதூகலம் அடைந்தவனாய் உடனே கீழே இறங்கி அவரை தன் வீட்டிற்கு அழைத்து சென்றான். தான் பாவியான மனுஷன் வட்டிக்கு கொடுப்பவன், நிந்தை நிறைந்தவன், பரிசுத்தமும், நீதியும் நிறைந்தவர் நம் வீட்டிற்கு வந்துள்ளாரே என உணர்ந்தவனாய், அவர் நிந்தையான மனுஷனை நேசித்ததினால், நிந்தை நிறைந்த சகேயு இயேசுவை நேசித்து இதோ என் சொத்தில் பாதியை ஏழைகட்கு கொடுத்து விடுகின்றேன். நான்

*சிந்தனைக்கு*

## பழைய ஏற்பாட்டுக் காலத்தில்

நான்கு குஷ்டரோகிகள்
கர்த்தருடைய கற்பனைக்கு கீழ்ப்படிந்து

**இவர்கள்**

"இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள் :
நாம் மவுனமாயிருந்து
பொழுது விடியுமட்டும் காத்திருந்தால்
குற்றம் நம்மேல் சுமரும்;
இப்பொழுதும் நாம் போய்
ராஜாவின் அரமனையாருக்கு
இதை அறிவிப்போம்
வாருங்கள் என்றார்கள்" (2 இரா.7 : 9).

## புதிய ஏற்பாட்டுக் காலத்தில்

இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர்
நல்மனச் சாட்சியைத் தள்ளிவிட்டு
விசுவாசமான கப்பலைச் சேதப்படுத்துகிறார்கள்

**இவர்கள்**

"பொல்லாதவர்களும், எத்தர்களுமானவர்கள்
மோசம் போக்குகிறவர்களாகவும்
மோசம் போகிறவர்களாகவுமிருந்து
மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்" (2 தீமோ. 3 13).

யாரையாவது ஏமாற்றி இருப்பேனானால், அதை அவர்கட்கு நாலத்தனையாக திருப்பி கொடுப்பேன் என்றான். இயேசு இன்று இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது என்றார் (லூக்கா 19 : 1-10). இயேசு பாவிகளான நம்மை, இனத்தில், மதத்தில், மொழியில் மட்டும் அல்ல அநேக நன்மையான காரியங்களிலும் பிறராக இருந்த நம்மை மீட்கவே உலகத்தில் வந்தார், என அறிந்து இருக்கின்றோம். இப்படி நாம் பிறனை நேசிப்பதினால் மற்றவர்களின் திரளான பாவங்களை மூடி ஆத்தும ஆதாயர்கள் எனப்படுவோம், கர்த்தருடைய வாக்குதத்தம் நாம் பிறனிடத்தில் அன்பு கூருவதிலே நிறைவேறும்.

எப்படியெனில், தேவன் ஆபிரகாமை நோக்கி வானத்து நட் சத்திரங்களை காட்டி இதை உன்னால் எண்ணக் கூடு மானால் உன் சந்ததியை எண்ணக் கூடும் என்றார். கடற்கரை மணலை காட்டி, இதை எண்ணக் கூடுமானால் உன் சந்ததியை எண்ணக் கூடும் என்று அவர் மேற்கோள் காட்டினார். அந்த சந்ததி கிறிஸ்துவே. இயேசுவோ நம்மை, நீங்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை பிரசங்கித்து சகல சிருஷ்டிகளையும் சீஷராக்குங்கள் என்கிறார். நாம் பிறனிடத்தில் அன்பு கூர்ந்து சுவிசேஷத்தை பிரசங்கிப்பதினால், வசனத்துக்கு கீழ்ப்படிந்தவர்களாகி, தேவ ஜனமாகின்றார்கள். அதினால் சபை பெருகி கிறிஸ்துவின் சந்ததியின் பட்டியலில் இணைக்கப்படுகிறது. எனவே தான், தேவனில் அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என வேதம் நமக்கு புத்தி சொல்லுகின்றது. - வளரும்

## ஜெபியுங்கள்

★ இம்மாதம் விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் பன்னிரண்டாவது வாசகர் கருத்தரங்கிற்காக...
★ கர்த்தருக்கு சித்தமானால் இவ்விதழ் இன்னும் அதிக பிரதிகளாக வெளிவர...
★ உலகமெங்கும் கர்த்தருடைய சபை வளர்ச்சியடைய....



DANIEL | **பழைய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள்** | தானியேல்

**பொருள்** : தம்முடைய மக்களை விடுவிப்பதற்காக உலகத்தின் வல்லமைகளை ஆளுகை செய்யும் தேவனுடைய சர்வ வல்லமை.

**ஆக்கியோன்**: தானியேல்.

**காலம்** : ஏறக்குறைய 605 - 536 கி.மு.

**திட்டவரைக் குறிப்பு** :

★ தானியேல் வரலாற்றில் கர்த்தருடைய வருகையின் நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தவும் சிறைப்படுத்தப்பட்ட கர்த்தருடைய ஜனங்களின் விசுவாசத்தைப் பெலப் படுத்தவும் தீர்க்கதரிசனம் உரைக்கிறான். இஸ்ரவேலின் சிறையிருப்பைக் குறித்த ஆறு சம்பவங்களை இஸ்ரவேலருக்கு கற்பிப்பதற்கான தரிசனம் : வரலாறு புதிய சோதனைகளை சந்திப்பதில் விசுவாசத்தையும் விடா முயற்சியையும் போதிக்கிறது (1-6).

★ வாழ்க்கையின் துன்ப நேரங்களில் விசுவாசத்திற்கென்றும் இடைவிடாத முயற்சிக்கென்றும் கர்த்தருடைய திட்டம் வரலாற்றுக்கு அழைக்கிறது (7-12).

★ தானியேல் வேறுபட்ட கலாச்சாரத்தின் மத்தியிலும் நம்பிக்கையற்ற சூழ்நிலையிலும் எப்படி மற்றும் ஏன் விசுவாசத்தையும், பரிசுத்தத்தையும் காத்துக் கொள்ள வேண்டும் என்பதைக் காண்பிக்கிறது.

**சிறப்புச் செய்தி :**

"இதோ மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்... சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும், மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது."

**வரலாற்று பின்னணி :**

தேவன் அனைத்து தேசங்களையும், தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார். அவர் தம்முடைய மக்களை இன்றும், என்றும் விடுவிப்பதற்கு வல்லமை உள்ளவர் என்பதை அறிய செய்தல்.

**வேத அறிவுப் போட்டி எண் 37ன் விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | இஸ்ரவேலை | - ஓசி.9 : 10 | 5. | ஆமோஸ் | - ஆமோஸ் 7: 15 |
| 2. | ஆகாஸ் | - ஏசா. 7 : 12 | 6. | சத்தியவசனத்தினாலே | - யாக்.1 : 18 |
| 3. | எரேமியா | - ஆதி. 35 : 4 | 7. | தபீத்தாள் | - அப்.9 : 36 |
| 4. | சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ | - தானி. 3 : 27 | 8. | உபசரியுங்கள் | - 1 பேது. 4 : 9 |
| | | | 9. | தேவன் | - 1 யோ. 3: 20 |
| | | | 10. | பவுல் | - கலா 1 : 4 |

# இவருக்கு செவி கொடுங்கள்

சகோ. *N. கானப்பன்*

பொதுவாக செவி கொடுத்தல் என்பது ஒருவர் சொல்வதை கேட்பது ஆகும். இன்றைய காலகட்டத்தில் அநேக மதிப்புள்ள மனிதர் அரசியல்வாதிகள் சொல்வதை கேட்கிறார்கள், ஆனால் உயிர் கொடுத்த பரம குமாரன், உலக தகப்பன் சொல்வதை கேட்பது கிடையாது. நமது தேவன் இவருக்கு செவி கொடுங்கள் என்றார் (மத்தேயு 17 : 5). இயேசு, மோசே, எலியா ஆகிய 3 பேர் இருக்கும் போது இவருக்கு மாத்திரம் செவி கொடுங்கள் என்று ஏன் சொன்னார்? ஏனென்றால் இயேசு மோசையை பார்க்கிலும் அதிக மகிமைக்கு பாத்திரராய் இருக்கிறார் (எபி. 3 : 3-6). அது மட்டும் அன்றி இயேசுகிறிஸ்துவே அவருடைய வீட்டிற்கு குமரனாக, உண்மையுள்ளவராக இருக்கிறார். இஸ்ரவேலிலே எலியா தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தான், அவன் எடுத்துக் கொள்ளப்பட்டான், ஆனால் கிறிஸ்துவோ அப்படி அல்ல, அவர் உலகத்திற்கு ஒளியாகவும், இரட்சகராகவும் வந்தவர், இயேசு மாத்திரம் உலக மக்களின் பாவத்தை நிவர்த்தி செய்ய முடியும். மனிதர்களை போல கிறிஸ்துவை சமமாக எண்ணி விட கூடாது என்பதற்காக மனிதர்களை விட்டு இவருக்கு செவி கொடுங்கள் என்று தேவன் கூறினார். கிறிஸ்துவும் எனக்குச் செவி கொடுத்து உணருங்கள் என்றார் (மாற்கு 7 : 14-16). காது உள்ளவன் கேட்க கடவன், ஏனெனில் கண்கள் இருந்தும் காணாமலும் காதுகள் இருந்தும் கேட்காமல் போகிறீர் என்று எசேக்கியல், எரேமியா, போன்றோர் கூட கூறியிருக்கிறார்கள் (எசேக்.12 : 2, எரே 5 : 21).

இக்காலத்தில் பிரிவினை சபைகள், கிறிஸ்துவின் சபையின் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாமல் செவிதினர்வுள்ளவர் களாகி தங்கள் சுய இச்சைக்கு ஏற்ற போதர்களை தங்களுக்கு திரளாக சேர்த்துக் கொண்டு சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டுகதைகளுக்கு சாய்ந்து போய் விட்டார்கள் (2 தீமோ.4 : 3), அவர்களை புதுப்பிப்பது கூடாத காரியம் (எபி. 6 : 6) ஜனங்கள் கர்த்தருக்கு செவிக் கொடுப்பதை விட்டு பலி, காணிக்கை மூலம் தேவனை மகிமைப்படுத்த நினைக்கிறார்கள் (ஏசாயா 1 : 10-12). ஆனால் கர்த்தர் அதை ஏற்றுக் கொள்வது இல்லை, ஏனெனில் ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் கர்த்தருடைய வசனத்திற்கு செவி கொடுப்பது உத்தமம் (1 சாமு. 15 : 22, பிர 5 : 1, ஓசியா 6 : 6). ஆண்டி முதல் அரசன் வரை தேவனுக்கு செவி கொடுப்பது அவசியம் (ஓசியா 5 : 1). ஆக இயேசு சொன்னார் சத்துருக்களை சிநேகியுங்கள், பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், துன்பப்படுத்து கிறவர்களுக்காக ஜெபியுங்கள் என்றார் (லூக். 6 : 27). இயேசுவும் பிதா

சொன்னதைக் கேட்டு செய்தார்; இயேசுவுக்கும் பிதாவாகிய தேவன் செவி கொடுத்தார். தேவனுக்கு செவி கொடுப்பதே பிரியம் என்று பேதுரு (அப்.4 : 19), கேட்கிறதில் மந்தமாயிருக்கக் கூடாது எபி 5 : 11 ஏனெனில், கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை (ஏசாயா 59 : 1-2). நம் பாவங்களே இயேசுவுக்கு செவி கொடுக்காதபடி தடையாக இருக்கிறது; பூமியிலே பாவங்களை மன்னிக்கிற அதிகாரம் கிறிஸ்துவிடம் மட்டுமே உண்டு (மாற்கு 2 : 10, அப்.4 : 12). அதனால் தான் தேவன் இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்கு செவிக் கொடுங்கள் என்றார் (மத்.3:17, 17:5).

செவி கொடுத்து கேட்பது என்பது பாரமான காரியமல்ல, மனிதன் தவறிலிருந்து அதாவது பாவத்திலிருந்து விடுதலை பெற சுலபமான வழி "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10 : 17), தேவனை தேடுகிறவர்களுக்கு பலன் கொடுக்கிறார் என்றும் விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருககிறது (எபி.11 : 1, 6). இந்த விசுவாசத்தின்படி இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளையிடுகிறார் (அப். 17 : 30), மனந்திரும்பின உடன் "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய், நீதி உண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ணப்படும் (ரோமர் 10 : 9-10), வார்த்தைக்கு செவிகொடுத்து அறிக்கையிட்ட பிறகு கீழ்ப்படிய வேண்டும் அதாவது ஞானஸ்நானம் என்பது தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை (1 பேதுரு 63 : 21). இந்த "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், அப்பொழுது தான் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று வேதம்கூறுகிறது (மாற். 16 : 16, அப். 2 : 38). இப்படி இரட்சிக்கப்படுகிறவர்களை தேவன் அனுதினம் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப். 2 : 47), அது தேவனுடைய ராஜ்ஜியம் கிறிஸ்துவின் ராஜ்ஜியம், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை, கிறிஸ்துவின் சபை. (மத். 6 : 33, 16 : 18, எபே. 5: 5, எபே 1 : 20-23, கொலே 1 : 18 ரோமர் 16 : 16). இந்த ஒரே சபையை அடையாளங்கண்டு கொண்டு அவர் சொன்ன வார்த்தையை ஆராய்ந்து பார்த்தால் நித்திய ஜீவன் உண்டு, கிறிஸ்துவை குறித்து சாட்சி கூறுவதும் புதிய ஏற்பாட்டு உபதேசமே, இந்த அறிவு அநேகரிடத்தில்லை. ஒன்றான மெய் தேவனையும், அவர் அனுப்பிய குமாரன் கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் (யோவான் 17 : 3), இவருடைய வார்த்தை தான் கடைசி நாளில் (யோ. 12 : 48) நியாயத் தீர்ப்பு கொடுக்கும், அதனால் தான் தேவன் " இவருக்கு செவி கொடுங்கள் என்றார்" இதை வாசித்து ஆசிர் பெறுவீர் ஆண்டவர் கைவிடார்.

## வேத அறிவுப் போட்டி எண். 38

*போட்டியாளர்கள் கவனத்திற்கு,*

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பி வைக்க வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

Ref No., உங்கள் பெயர், ஊர் மற்றும் தெளிவான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.

1. அவன் சாம்பலை மேய்கிறான்; எம்மனம் அவனை மோசப்படுத்தினது?
2. நானோ செவிடனைப் போலக் கேளாதவனாகவும், ஊமையனைப் போல வாய்திறவாதவனாகவும் இருக்கிறேன் என்று பாடின ராஜா யார்?
3. பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டு கொண்டது போல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் எதனாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டு கொண்டது?
4. சத்தியத்திற்கு விரோதமாக நாங்கள் ஒன்றுஞ் செய்யக் கூடாமல், சத்தியத்திற்கு அனுகூலமாகவே செய்யக் கூடும் என்று எழுதிய அப்போஸ்தலன் யார்?
5. நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் யார் நிமித்தம் கீழ்ப்படியுங்கள்?
6. தன் வேலையாட்களில் பத்துப் பேரைச் சேர்த்து, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே செய்தவன் யார்?
7. தாவீது ராஜாவாகும் போது எத்தனை வயதாயிருந்தான்?
8. இயேசு ஏறக்குறைய எந்த வயதில் ஞானஸ்நானம் பெற்றார்?
9. நீதிமானோ எப்படிப்பட்ட அஸ்திபாரமுள்ளவன்?
10. நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தவர் யார்?

## நடப்புச் செய்திகள்

- ☆ தீவிரவாதத்தை முறியடிக்க 4 அம்ச திட்டங்களை பிரதமர் வாஜ்பாய் வெளியிட்டார்.
- ☆ அன்னை தெரசாவின் தபால் தலை வாடிகன் நகர தபால் நிலையத்தில் வெளியிடப்படுகிறது.
- ☆ நாகரிகம் அடையாத மனிதகுலம் : பாதிரியார் கிரஹாம் ஸ்பெயின்ஸ் வழக்கில் நீதிபதி வருத்தத்துடன் குறிப்பிட்டார்.
- ☆ 460 கோடி கி.மீ. தூரம் பயணம் செய்து 34 தடவை வியாழன் கிரகத்தைச் சுற்றி வந்த 'கலிலீயோ' விண்கலம் 14 ஆண்டு காலப் பணிக்குப் பின் வியாழன் கிரகம் மீது மோத வைத்து விஞ்ஞானிகள் சிதறடித்தனர்.
- ☆ மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற 6வது ஆசிய கோப்பை ஆக்கி போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி 4-2 என்ற கோல் கணக்கில் பாக்கிஸ்தானை வீழ்த்தி முதன் முறையாக ஆசிய கோப்பையை கைப்பற்றியது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th October 2003.

*எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.*




**கிறிஸ்துவின் சபை**

17.2.102-D/5, ராஜன் நகர், வத்தலக்குண்டு–624 202.
திண்டுக்கல் Dt. ✆: (04543) 263278

குப்பம்மாள்பட்டி – 624 212. கொடைக்கானல் T.K., திண்டுக்கல் Dt.

7, ஆதிவீராச்சாமி நாயக்கர் சந்து, அரண்மனை தெரு, வடகரை
பெரியகுளம்–626 501, தேனி மாவட்டம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 a.m<br>7.00 a.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon<br>Wed,Thu | 2.00 p.m<br>2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Mon, Tue,<br>Wed, Thu,<br>Fri | 5.30 p.m<br>5,45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m<br>4.00 p.m | Box. 5540<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| PAITE | Sunday | 8.00 p.m<br>8.15 p.m | Box. 56<br>Manipur - 795 128 | KAMLIAN PAO |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

**Monthly Magazine** **FOR FREE DISTRIBUTION ONLY**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.